DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 263/2022 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 1 |
| Name | கலையரசி |
| Father / Husband Name | |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 02.05.2023.

-----------------------------------------------------------------------------------------------

(எதிரி ஆஜர்)

முதல் விசாரணை:

**(1)** நான் தற்சமயம் எம்.புதூரில் வசித்து வருகிறேன். சம்பவ சமயம் சிவகங்கை திருப்பத்தூர் ரோடு எண்.78 என்ற வீட்டில் வசித்தேன். என் கணவர் 6 1/2 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனக்கு இரண்டு ஆண், பெண் பிள்ளைகள் உள்ளனர். மூத்த மகன் சிவக்குமார். இரண்டாவது மகள் நாகஜோதி. மூன்றாவது மகன் விஜயகுமார். நான்காவது மகள் கிருஷ்ணவேணி. ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரி தான் என் மூன்றாவது மகன் விஜயகுமார். எங்களுக்கு சொந்தமாக சிவகங்கை திருப்பத்தூர் ரோடு பழைய நீதிமன்றம் அருகில் ஓட்டுவீடு என்கணவரால் கட்டப்பட்டது. அதன்பிறகு என் மூத்த மகன் சிவக்குமார் சிங்கப்பூரிலிருந்து சம்பாதித்த பணத்தைக் கொண்டு தார்சு வீடு கட்டப்பட்டது.

(2) என் கணவர் இறந்த பிறகு அடிக்கடி ஆஜர் எதிரியான என் இளைய மகன் என்னை வீட்டை காலி செய்யச் சொல்லி அடிக்கடி தகராறு செய்து வந்தார். மேற்படி எங்களுக்கு சொந்தமான தார்சு வீட்டில் கீழ்தளத்தில் நானும், மேல்தளத்தில் என் மூத்த மகன், மருமகளும் குடியிருக்கிறோம். அதற்கு பின்னால் இருந்த ஓட்டுவீட்டில் ஆஜர் எதிரி குடியிருந்து வருகிறார். அவர் குடியிருக்கும் ஓட்டுவீட்டிற்கு அடுத்தே மூன்று ஓட்டுவீடுகள் உள்ளது. அதை வாடகைக்கு விட்டு அந்த பணத்தையும் ஆஜர் எதிரி வாங்கிக் கொள்கிறார். 29.08.2021ம் தேதி ஞாயிற்றுகிழமை மதியம் 2.00 மணியளவில் ஆஜர் எதிரி சொத்து வேண்டுமென கேட்டதால் எங்கள் வீட்டில் என் பிள்ளைகள், என் அண்ணன், உறவினர்கள் அனைவரையும் வைத்து பேசினோம். சொத்து பிரித்து தருவதாக சொன்னேன். ஆனால் ஆஜர் எதிரி என் பெண் பிள்ளைகளுக்கு சொத்து கொடுக்க முடியாது என பிரச்சனை செய்தார். ஆஜர் எதிரி என்னை அடித்து கீழே தள்ளவிட்டார்.

(3) என் மகன், மகள்கள், அண்ணன் மனைவி ஆகியோரையும் அடித்து காயப்படுத்தி வீட்டின் ஜன்னல்களையும் உடைத்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். கம்பால் அடித்து காயப்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார். என் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு வேண்டுமென்பதற்காகத் தான் நான் என் வீட்டில் குடியிருக்காமல் பாதுகாப்பிற்காக தற்சமயம் என் அண்ணன் வீடான எம்.புதூரில் வசித்து வருகிறேன். மேற்படி ஆஜர் எதிரியின் செய்கை குறித்து நடவடிக்கை எடுக்க கோரி நான் தான் சிவகங்கை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார்மனு நான் கொடுத்தது தான். நான் சொல்ல சொல்ல புகாரை என் உறவினர் எழுதி அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். **(அந்த புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

(1) சாட்சி கிருஷ்ணவேணி மற்றும் நாகஜோதி எனது மகள்கள் என்றால் சரிதான். வழக்கின் சாட்சி மஞ்சுளா என் அண்ணன் மகள், முத்து என்பவர் என் அண்ணன் மருமகன் என்றால் சரிதான். சாட்சி ராணி என் அண்ணன் மனைவி என்றால் ஆமாம். 29.08.2021 அன்று மதியம் 2.00 மணிக்கு பஞ்சாயத்து

பேசியபோது என் அண்ணன் வீரைய்யா இருந்தார் என்றால் ஆமாம். புதுக்கோட்டையிலிருந்து சிவக்குமார் என்பவர் வந்திருந்தாரா என்றால் ஆமாம். கோர்ட் வாசலில் உள்ள வீட்டில் கீழ்தளத்தில் இரண்டு கடைகளும், ஒரு வீடும், மேல்தளத்தில் ஒரு வீடும் உள்ளது என்றால் ஆமாம்.

(2) மேற்படி சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் என் கணவரின் பெயரில் உள்ளது. என் வீட்டுக்காரர் எப்போது இறந்தார் என்றால் 2016ல் இறந்தார். எனது வீட்டுக்காரர் பெயரில் காமராஜர் பெயரில் இரண்டு ஏக்கர் நிலமும், எனது பெயரில் 60 செண்ட் நிலம் இருக்கிறது என்றால் ஆமாம். ஒக்கூரில் எனது வீட்டுக்காரர் பெயரில் 6 1/2 செண்ட் பிளாட் உள்ளதா என்றால் ஆமாம். சொத்து பிரிப்பது தொடர்பாக பேசியபோது எனது மகன் எதிரி விஜயகுமாருக்கும் சொத்து தருவதாக கூறினேனா என்றால் ஆமாம். எனது கணவர் பெயரில் கோர்ட் வாசலில் உள்ள தார்சு வீட்டில் ஆஜர் எதிரிக்கு பங்கு கொடுப்பதாக கூறினீர்களா என்றால் இல்லை. மூத்த மகனுக்கு தான் வீடு என்று சொல்லியிருந்தோம். எதிரி அடிக்கடி வீட்டுக்கு வந்து பிரச்சனை செய்தது பற்றி புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

(3) சாட்சி தானாக எனது வீட்டின் ஜன்னல் கண்ணாடி மற்றும் பைப்புகளை எதிரி உடைத்துவிட்டார். அதனால் அங்கு தங்கவில்லை என்று கூறுகிறார். மேற்படி சங்கதியை புகாரிலும், போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த சண்டையில் எதிரி அடித்தாரா என்றால் என்னை கதவில் பிடித்து தள்ளவிட்டார். எதிரி என்னை அடித்ததற்கு நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டேனா என்றால் ஆமாம்.

(4) எதிரி எனது மகள்களையும், எனது அண்ணன் மனைவி, எனது அண்ணன் மகள் மஞ்சுளா ஆகியோரை எதிரி அடித்ததில் காயம் ஏற்பட்டதற்காக சிகிச்சை எடுத்துக்கொள்ள மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவமனையில் அனைவருக்கும் ஏற்பட்ட காயத்தை பொறுத்து மருத்துவர் எதனால் காயம் ஏற்பட்டது என்று தனித்தனியாக குறிப்பு எடுத்துக்கொண்டாரா என்றால் ஆமாம்.

(5) நான் மருத்துவமனைக்கு எப்போது சென்றேன் என்றால் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துவிட்டு அதன் பிறகு மாலை 6.00 மணிக்கு மருத்துவமனைக்கு சென்றேன். மருத்துவமனையில் நான் எத்தனை நாள்

சிகிச்சையில் இருந்தேன் என்றால் மருத்துவம் பார்த்து ஊசி போட்டுவிட்டு என்னை அனுப்பிவிட்டார்கள். காவல் நிலையத்தில் புகாரை யார் எழுதியது என்றால் எனது உறவினர் சிவக்குமார்.

(6) சிவக்குமாரை போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. மூத்த மகன் சிவக்குமார், இரு மகள்கள் எல்லோரும் சேர்ந்து கொண்டு எதிரி இளைய மகன் விஜயகுமாருக்கு எந்த சொத்தும் கொடுக்க கூடாது என்று ஒரு பொய் புகாரை கொடுத்து இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 02.05.2023**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.